**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.**

**அ.வ.எண். 31/2017**

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2026 – ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 16** – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **16.02.2026** |
| **பெயர்** | **சீனிவாசன்** |
| **த/பெ** | **வெங்கையா** |
| **சாட்சி** | **PW1** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 11.23. a.m**

**16–ம் பிரதிவாதி தரப்பில்**
**குறுக்கு விசாரணை–**

1. நான் இவ்வழக்கில் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 20 செண்ட் நிலத்தை 18 செண்ட் நிலமாக யு.டி.ஆர் பட்டாவில் குறிப்பிட்டுள்ளது அதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எந்த கிராமத்தில் 20 செண்ட் நிலம் உள்ளது என்றால் அருமந்தை கிராமம். வழக்கு சொத்தின் சர்வே எண் 218/11. அது உட்பிரிவு ஆகியுள்ளதா என்றால் ஆகியுள்ளது சர்வே எண்கள் 218/11 எ, 218/11 பி என ஆகியுள்ளது. மேற்சொன்ன சர்வே எண் எந்த பக்கம் வாதி உரிமை கோருகிறார் என்றால் தெற்கு பக்கம் உள்ள 20 செண்டிற்கு உரிமை கோருகிறார். தெற்கு பக்கம் உள்ள வழக்கு சொத்தின் 4 எல்லைகள் என்ன என்றால் மேற்சொன்ன சர்வே எண்ணின் வடக்கு பக்கம் மீதம் 20 செண்ட் நிலம் உள்ளது. தெற்கு பக்கம் ரோடு உள்ளது. கிழக்கு பக்கம் குமார் என்பவரின் வீடு உள்ளது. மேற்கு பக்கம் நடராஜன் என்பவரின் வீடு உள்ளது.

2. ராகவச்செட்டியார்க்கு எத்தனை பிள்கைள் என்றால் 2 பிள்ளைகள் ஒருவர் லட்சுமணசெட்டியார் மற்றொருவர் பேரைய செட்டியார். நான் யாரிடம் இருந்து வழக்கு சொத்தினை வாங்கினேன் என்றால் லட்சுமணசெட்டியார். மேற்சொன்ன இருவருக்கும் இடையே வாய்மொழியாக பாகப்பிரிவினை ஏற்பட்டதா என்றால் ஆம். அதில் 20, 20 சென்ட் பிரித்துக்கொண்டார்கள். எங்கள் குடும்பத்திற்கு வழக்கு சொத்து எப்படி வந்து சேர்ந்தது என்றால் மேற்சொன்ன லட்சுமணசெட்டியாரிடம் இருந்து என் தந்தை பதிவு செய்யப்பட்ட கிரையம் ஆவணம் மூலம் வாங்கினார். எந்த வருடம் பதிவு செய்யப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை.

3. என் வாதுரையில் லட்சுமணசெட்டியாரிடமிருந்து என்னுடைய தாத்தாவான ஏமுலு மேஸ்திரியிடம் இருந்து வாங்கியதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். ஏமுலு மேஸ்திரி இறந்த பிறகு என் தந்தையான முதலாம் வாதிக்கு ஒரே வாரிசு என்ற முறையில் சொத்து கிடைக்கப்பெற்றது என்றால் சரிதான். இந்த வழக்கு முதலில் தாக்கல் செய்த போது நான் தரப்பினராக இருந்தேனா என்றால் இல்லை. என் தந்தை இந்த வழக்கை முதலில் தாக்கல் செய்தார். அவர் இறந்த பிறகு 2-ம் வாதியாக என் தாயாரும், 3-ம் வாதியாக நானும் தரப்பினாராக சேர்க்கப்பட்டோம்.

4. வடக்கு பக்கமாக பிரதிவாதிகளின் நிலம் உள்ளது என்று பிராதில் குறிப்பிட்டுள்ளபட்சத்தில் அவர்களுக்கு அந்த சொத்து எப்படி கிடைக்கப்பெற்றது என்றால் எனக்கு தெரியாது. மேற்சொன்ன பிரதிவாதிகளுக்கு சொந்தமான வடக்கு பக்கம் உள்ள 20 சென்ட் நிலம் பிரதிவாதிகளுக்கு கிடைத்ததில் எனக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை என்றால் ஆட்சேபணை எதுவும் இல்லை. நில உடைமை மேம்பாட்டுத் திட்டததின் கீழ் பிரதிவாதிகளுக்கு 22 சென்ட் நிலமும்

எங்களுக்கு 18 செண்ட் நிலத்திற்கு பட்டா வழங்கியதால் தான் எங்களுக்குள் பிரச்சினை ஏற்பட்டது என்றால் சரிதான்.

5. பிரதிவாதிகளிடம் மேற்சொன்ன பட்டா குறித்து கேட்டேனா என்றால் கேட்டேன். முதலில் சமரசமாக செல்லவதாக கூறினார்கள். ஆனால் பின்னர் அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. அதனால் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம். இவ்வழக்கின் 16-ம் பிரதிவாதியான மைனர் பிரியதாரணியை எதற்கான தரப்பினராக சேர்த்தேன் என்றால் 5ம் பிரதிவாதியின் பேத்தி ( Legal Heir ) என்ன முறையில் தரப்பினராக சேர்த்தேன். பிரியதாரணியின் தந்தை சேகர் என்பவர் இராமசந்திரனுக்க முன்பு இறந்துவிட்ட காரணத்தினால் தான் 16ம் பிரதிவாதியாக மைனர் சேர்க்கப்பட்டார் என்றால் சரிதான். 16ம் பிரதிவாதியாக எதிரான என்ன பரிகாரம் கோரியுள்ளோம் என்றால் மேற்சொன்ன 22 செண்ட் நிலம் குறித்து தான் கோரியுள்ளோம்.

6. தற்போது நாங்கள் 20 செண்ட் நிலம் அனுபவித்து கொண்டு வருகிறோமா என்றால் இல்லை. 18 செண்ட் நிலம் தான் நாங்கள் அனுபவித்து கொண்டு வருகிறோம். பிரதிவாதிகள் 22 செண்ட் நிலம் அனுபவித்து கொண்டு வருகிறார்கள். 16 ம்பிரதிவாதியை எதிர்த்து எந்த வித பரிகாரமும் கோராத காரணத்தினால் அவருக்கு எதிராக இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**விசாரணை முடியும் நேரம். 11.44.a.m.**